**செ. கு. எண்:27** **நாள்: 01.02.2021**

## மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு. எடப்பாடி K. பழனிசாமி** அவர்களின் அறிக்கை – **1.2.2021**

**திருநெல்வேலி மாவட்டம்,** மணிமுத்தாறு அணையிலிருந்து மணிமுத்தாறு பிரதானக்கால்வாயின் **4**வது ரீச்சில் உள்ள **10**வது மடை வழியாக திசையன்விளை, இராதாபுரம் மற்றும் சாத்தான்குளம் பகுதிகளிலுள்ள சுவிசேசபுரம் குளம், புதுக்குளம் கல்குளம், நந்தன்குளம், செங்குளம், முதலாளிகுளம், குருவிசுட்டான் குளம், அப்புவிளைகுளம், எருமைகுளம், அவிச்சான்குளம், இலகுளம் மற்றும் கடகுளம் ஆகிய சிறப்பு குளங்களுக்கும் (Special Tanks) ஆயங்குளம் மற்றும் ஆணைக்குடி படுகைகளுக்கும் வினாடிக்கு **50** கன அடிவீதம் **3.2.2021 முதல் 28.2.2021 வரை 25** நாட்களுக்கு குடிநீர்த் தேவைக்காக தண்ணீர் திறந்துவிட நான் ஆணையிட்டுள்ளேன்.

இதனால், திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள ராதாபுரம் மற்றும் திசையன்விளை வட்டங்கள் மற்றும் தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள சாத்தான்குளம் வட்டம் ஆகிய வட்டங்களில் குடிநீர் தேவை பூர்த்தியாகும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், பொதுமக்கள் தண்ணீரை சிக்கனமாக பயன்படுத்த வேண்டுமாய் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

**K. பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**